

# பனிமயம்

## டிசம்பர் 2025

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-

# தூத்துக்குடி மறைமாவட்ட இறையடியார்கள்

யூபிலி ஆண்டு 2025
எதிர்நோக்கின் திருப்பயணிகள்



**அகுஸ்தின் பெரைரா**

விண்ணகப் பிறப்பு 21.10.1911
இறையடியார் அறிவிப்பு 26.03.2015



**அந்தோனி சூசைநாதர்**

விண்ணகப் பிறப்பு 08.06.1968
இறையடியார் அறிவிப்பு 08.08.2011



# பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



அன்பு மக்களே, நலந்தானா?

கடந்த 11 மாதங்களாக கண்ணின் மணிபோல காத்திட்ட இறைவனுக்கு நன்றி. வருடத்தின் கடைசி மாதத்தையும் காணச் செய்த இறைவனுக்கு நன்றி. வருடத்தின் முதல் மாதத்தை முதல் நாளை மாதாவுக்கு என்று அர்ப்பணித்து தொடங்கிய நாம் வருடத்தின் இறுதி மாதத்தையும் அமலஉற்பவத் தாய்க்கு அர்ப்பணிக்கின்றோம். அவருடைய பரிந்துரையும், பாதுகாவலும் இந்த மாதம் முழுவதிலும் நம்மோடிருந்து நம்மை வழிநடத்துவதாக.

ஜென்மப் பாவமில்லாமல் உற்பவித்த அன்னையை நினைவு கூர்கின்றோம். நம் ஆண்டவர் இயேசுவைப் பெற்றெடுக்க இறைத்தந்தையால் முன்குறித்து வைக்கப்பட்ட காரணத்தினால் மரியன்னை ஜென்மப் பாவத்திலிருந்து விடுவிக்கப்பட்டு அமலஉற்பவியாக நமக்குத் தரப்பட்டார். அன்னையின் பிறப்பு முதல் விண்ணகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரை வேறு எந்தப் பாவமும் அணுகாமலும் தன்னை காத்துக் கொண்டார். மனிதப் பிறவி என்ற விதத்தில் பாவத்திற்கான பல சூழ்நிலைகளை சந்தித்திருந்தாலும் பாவமறியாது வாழ்ந்தார். நாமும் வாழும்படி நம்மை அழைக்கின்றார். பசாசையும், பாவத்தையும், பாவத்திற்கு ஏதுவான சூழ்நிலைகளையும் விட்டுவிடுவதாக வாக்குறுதி கொடுக்கின்றோம். ஆனாலும் பாவத்தை பற்றிக்கொண்டுதான் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். அன்னையின் துணை கொண்டு பாவத்தை விலக்கி வாழ முடிவெடுப்போமா?

டிசம்பர் மாதத்தில் ஆண்டவர் இயேசுவின் பிறப்பையும் நாம் கொண்டாடுகிறோம். இயேசு மனித நிலையை நேசித்தார். எனவேதான் பிலி 2:6,7 சொல்வதுபோல "கடவுள் வடிவில் விளங்கிய அவர் கடவுளுக்கு இணையாக இருக்கும் நிலையை விடாமல் பற்றிக்கொண்டிருக்க வேண்டியதொன்றாகக் கருதாமல் தன்னையே தாழ்த்தி மனித உரு எடுத்தார்". நாம் இன்று மனித நிலையையும், சகமனிதர்களையும் நேசிக்கிறோமா? மதிக்கிறோமா? நேசித்தால், மதித்தால் நமக்குள்ளே பிளவுகள், பேதங்கள் இருக்குமா? அல்லல்படும், ஆபத்தில் இருக்கும், துன்புறும் அனைத்து மனிதரும் நம் உடன்பிறப்புகள் என்பதை எப்பொழுது உணர்ந்து வாழப்போகிறோம்?

அனைவருக்கும் கிறிஸ்து பிறப்புப் பெருவிழா நல்வாழ்த்துகளும், புத்தாண்டு ஆசீர்வாதங்களும்.....

God Bless You All.



என்றும் பாசத்துடன்

**அருள்பணி. ஸ்டார்வின்**

திருத்தல அதிபர் & பங்குத் தந்தை

உதயம் 27 தாரகை 4

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருள்பணி. ஸ்டார்வின்**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்
தூத்துக்குடி

ஆசிரியர்:
**அருள்பணி. ஸ்டார்வின்**


## பனிமயம் விளம்பர விபரங்கள்

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |


வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : **'பனிமயம்'**
பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம்,
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com


### இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

**முரண்பாடு நிறைந்த பகுதிகளில் வாழும் கிறிஸ்தவர்களுக்காக...**

போர் அல்லது மோதல் உள்ள பகுதிகளில், குறிப்பாக நடுகிழக்கு நாடுகளில் வாழும் கிறிஸ்தவர்கள் அமைதி, ஒப்புரவு மற்றும் எதிர்நோக்கு ஆகியவற்றின் விதைகளாக விளங்கிட நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...


1. அகுஸ்தின் பெரைரா
   - சிப்பிக்குள் பிறந்த முத்து . . . . . . . . . . . . . . . . 4
   அருள்சகோதரி P.S. லில்லி
2. இறையடியார் அந்தோனி சூசைநாதர் . . . . . . . . 6
   அருள்பணி. சகேஷ் சந்தியா
3. மரியன்னையின் திருப்பெயர்கள் . . . . . . . . . . . . 8
   அருள்பணி. குமார்ராஜா
4. தரிசனம் தருவாய் தாயே... . . . . . . . . . . . . . . . 10
   அருள்பணி. க.செ. பிரவீன் ராசு
5. வரமாக வந்தவர்
   -அன்னையின் அமலோற்பவம் . . . . . . . . . . 12
   ரோஸ் சேவியர்
6. பனிமய சாட்சியம் . . . . . . . . . . . . . . . . . . . . 12
7. இம்மாதப் புனிதர் . . . . . . . . . . . . . . . . . . . . . 14
   அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ்
8. விவிலியப் போட்டி . . . . . . . . . . . . . . . . . . . . 15
9. 2025 கிறிஸ்து பிறப்பு கால சிறப்பு நிகழ்வுகள் . . 18
10. பனிமயப் பகிர்வு . . . . . . . . . . . . . . . . . . . . . . 20

# அகுஸ்தின் பெரைரா

## சிப்பிக்குள் பிறந்த முத்து



11.02.1854 அன்று, திரு. இக்னேசியஸ் பெரைரா - திருமதி மரிய மிக்கேலம்மாளின் இல்லற வாழ்வின் முதல் கனியாக மலர்ந்தவர் இறை ஊழியர் அகுஸ்தின் பெரைரா.

இறை ஊழியர் அகுஸ்தின் பெரைரா குடும்பம் இறைஞானம், இறைபக்தி, இறை ஒழுக்கம் அனைத்திலும் சிறந்து விளங்கிய குடும்பம். மரியன்னை மீதும், இயேசுவின் திருஇருதயத்தின் மீதும் பக்தி கொண்டிருந்த குடும்பம். இறை ஊழியரின் தாய் சிறு வயதிலேயே நம் இறை ஊழியரை அங்குள்ள FMM அருள்சகோதரிகளின் சிற்றாலயத்திற்கு திருப்பலிக்கு அழைத்துச் செல்வது வழக்கம். திருப்பலி முடிந்தவுடன் அவர்களோடு வரவேற்பறையில் சிறிது நேரம் அமர்ந்து பேச அனுமதிப்பாராம். அதுவே துறவற வாழ்வின் மீது இவருக்கு பற்றும் பிடிப்பும் வளர காரணமாக அமைந்துள்ளது என்று கூறுகிறார்கள்.

தொடக்கக் கல்வியை இறை ஊழியர் புனித சேவியர் தொடக்கப் பள்ளியில் பயின்றார். உயர்நிலைக் கல்வியை தூத்துக்குடியில் கற்றார். இவருக்கு 16 வயது ஆனபொழுது வியாபாரத் துறையில் முன்னணியில் இருந்த இவரது தந்தை தொழிலைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்று கொழும்புக்கு பயிற்சி பெற இறை ஊழியரை அனுப்பி வைக்கிறார். ஆனால், கொழும்பின் நாகரீக வாழ்வும், ஆடம்பரமும், செல்வ செழிப்பும் அகுஸ்தின் பெரைராவின் மனதைக் கவரவில்லை.

எனவே, அனைத்தையும் துறந்து யாருக்கும் தெரியாமல் கப்பலேறி தூத்துக்குடி வருகின்றார். கடும் கோபத்தின் உச்சிக்கே சென்ற இறை ஊழியரின் தந்தை பங்குத் தந்தையாக இருந்த ஜூலியஸ் லார்மேயின் உதவியை நாடுகிறார். பங்குத்தந்தையோ இறை ஊழியருக்கு துறவறத்தின் மீது பற்றுள்ளது என்பதைக் கண்டு உணர்ந்து அவரைத் தம்முடன் வைத்துக் கொண்டார்.

நாகப்பட்டினத்திற்கு மாற்றலாகிச் சென்ற பங்குத்தந்தை லார்மே அகுஸ்தினையும் நாகப்பட்டினத்திற்கு அழைத்துச் சென்று அங்கு படிக்க வைக்கின்றார். பின்னர் அங்கிருந்து தந்தை ஜூலியஸ் லார்மே பஞ்சம்பட்டிக்கு பங்குத் தந்தையாக மாற்றலாகி செல்கிறார். அதுவே அகுஸ்தினுக்கு துறவற வாழ்வின் திருப்புமுனையாக அமைந்தது.

அன்று பஞ்சம்பட்டி பஞ்சத்தால் வாடி வதங்கிய நேரம். ஒழுக்கக்கேடு, சாதிய ஏற்றத் தாழ்வுகள், பெண்ணடிமைத்தனம், மூட பழக்க வழக்கங்கள், ஏழை பணக்காரன் நிலை, விசுவாசப் பிறழ்ச்சி இவையெல்லாம் புரையோடிப் போன பஞ்சை மண்ணை

சீரமைக்க தந்தை ஜூலியஸ் லார்மே இறை ஊழியரின் உதவியை நாடுகிறார். பட்டணத்தில் பிறந்த இறை ஊழியர் பட்டிக்காட்டு மக்களுக்காக பயணம் மேற்கொள்கின்றார். பசியறியாதவர் பஞ்சத்தில் இருந்து மக்களின் பசி போக்க தன் குடும்பத்தின் உதவியை நாடி உதவி செய்கிறார்.

மறைக்கல்வி கற்பித்தல், மக்களை திருப்பலிக்கு தயார்படுத்துதல், பிரிந்த குடும்பங்களை சீரமைத்தல், முறையற்ற திருமணங்களை ஒழுங்குபடுத்துதல், அரசாங்கம் மற்றும் நன்கொடையாளர்கள், அறநிலையங்களிடமிருந்து உதவிகள் பெற்று நிவாரணப் பணி புரிதல் போன்ற பல்வேறு பணிகளை முனைப்புடன் முன்னெடுத்தார்.

இவரது பணியில் கரம் கோர்க்க நான்கு இளம்பெண்கள் ஆணாதிக்க வேலைகளை உடைத்தெறிந்து பெயாத்தஸ் என்ற பெயரோடு 02.02.1899 அன்று அமலியின் சிறு வீட்டில் நுழைந்தனர். அவர்களை வழிநடத்தும் பொறுப்பு சீடன் அகுஸ்தினிடம் கொடுக்கப்பட்டது. தன் சீடன் அகுஸ்தின் பெரைராவிடம் விளங்கிய புனிதத்தையும் ஆன்ம தாகத்தையும் கண்ட தந்தை ஜூலியஸ் லார்மே அவரை ஒரு குருவாக ஆக்க வேண்டும் எனத் திருவுளம் கொண்டு இலத்தீன் மொழியை கற்றுக் கொடுத்தார். தந்தை அகுஸ்தின் பெரைராவின் எளிமையும், தாழ்ச்சியும், பொறுமையும், சகிப்புத் தன்மையும் அவரை ஒரு குருவாக உயர்த்தியது. 14.01.1900 அன்று காலை 07.00 மணி திருப்பலியில் மேதகு ஆயர் பர்த் அவர்களால் குருவாக திருநிலைப்படுத்தப் பட்டார்.

தந்தை லார்மே அவர்களது இறப்புக்குப் பின் சகோதரிகளை வழிநடத்தும் பொறுப்பில் மிகவும் அக்கறை கொண்டார். அப்பொழுது பங்குத்தந்தையாக இருந்த யூஜின் நெஸ்புளூஸ் என்பவரது விருப்பப்படி, அவர்களை தனி சபையாக உருவெடுக்க, தன் குடும்ப உறவினர்களிடமிருந்து உதவிகளைப் பெற்று நவகன்னியர் பயிற்சிக்காக 02.07.1911இல் மதுரைக்கு அழைத்து வந்தார். அன்றுதான் அமலவை பிறந்தநாள். பட்டிக்காட்டு சூழலில் வளர்ந்த இவர்கள் நாகரீக வாழ்வில் எப்படி பயிற்சி பெறுவார்களோ என்ற ஏக்க உணர்வோடு மதுரையில் இருந்து புறப்பட்ட அவர் மிகவும் நோய்வாய்ப்பட்டார்.

இறக்கும் தருவாயில்கூட, தன் மகன் I.X. பெரைராவிடம் நவகன்னியர் பயிற்சிக்கான தொகையை நீ மாதம் மாதம் செலுத்த முன்வந்தால், நான் மனநிம்மதியுடன் கண்மூடுவேன் என்று கூறி 21.10.1921 அன்று அன்னை மரியின் நாளில் இறப்பேன் என்ற வாக்குத்தத்தத்தின்படி சனிக்கிழமை இறைவனடி சேர்ந்தார். நூற்றாண்டுகளைக் கடந்துவிட்ட பின்பும் அவரது சகாப்தம் என்றும் வாழ்ந்து கொண்டிருக்கின்றது.

**அருள்சகோதரி P.S. லில்லி**

**அமலவை அருள்சகோதரிகள்**





# இறையடியார் அந்தோனி சூசைநாதர்

தூத்துக்குடி மறைமாவட்ட ஆசனக் கோயிலாக (மறைமாவட்ட பேராலயமாக) விளங்கும் திரு இருதயங்களின் பேராலயத்தில் அன்று ஆலயப் பணியாளராக பணிபுரிந்த திரு. பிரான்சிஸ் அவர்தம் துணைவியார் மத்தேசியம்மாள் இணையருக்கு கடைசி மகனாகவும் ஆறாவது பிள்ளை செல்வமாகவும் 1882ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் நாள் அன்று அந்தோனி பிறந்தார்.

தூத்துக்குடியில் அமைந்துள்ள புனித சவேரியார் பள்ளியில் தனது பள்ளிப் படிப்பை நிறைவு செய்த அந்தோனி குருத்துவப் பயிற்சி பெற இலங்கையின் கண்டிமாநகரில் நிறுவப்பட்ட பாப்பிறை குருமடத்தில் சேர்ந்தார். மரியா வழி இயேசுவை அடைவோம் என்னும் விருதுவாக்கோடு 1910ஆம் ஆண்டு டிசம்பர் 17ஆம் நாள் அன்று திருச்சி ஆயர் மேதகு அகஸ்தீன் பெசாந்தியார் அவர்களால் அருள்பணியாளராக அருள்பொழிவு செய்யப்பட்டார். திருச்சி மறைமாவட்டத்திலும் அதன் பின்னர் உதயமான தூத்துக்குடி மறைமாவட்டத்திலும் தந்தை அந்தோனி அவர்கள் ஏறக்குறைய 29 ஆண்டுகள் இறைப்பணியாற்றியுள்ளார்.

புனித வளனார் ஆலயம் திண்டுக்கல் (1911 – 1912), புனித மரிய மதலேனம்மாள் ஆலயம், திருச்சி அய்யம்பட்டி (1912 – 1917), திருஇருதய ஆண்டவர் ஆலயம், பஞ்சம்பட்டி (1917 – 1921), புனித அந்திரேயா ஆலயம், உவரி (1921 – 1930), புனித தோமையார் ஆலயம், கூடுதாழை (1930 – 1931), பரிசுத்த பனிமய மாதா ஆலயம், தூத்துக்குடி (1931 – 1937), புனித சவேரியார் ஆலயம், புன்னைக்காயல் (1936), புனித யாகப்பர் ஆலயம், மணப்பாடு (1937 – 1939) ஆகிய இடங்களில் அருள்தந்தை அந்தோனி மறைமாவட்ட குருவாகப் பணியாற்றினார்.

மறைமாவட்டக் குருவாக 29 ஆண்டுகள் பணியாற்றிய பின் தந்தை அந்தோனி அவர்கள் 1939ஆம் ஆண்டு ஏப்ரல் 28ஆம் நாள் அன்று இலங்கையின் தோலக்கட்டியில் நிறுவப்பட்டிருந்த செபமாலை தாசர் துறவற சபையில் இணைந்தார். திருக்குடும்பத் தலைவர் புனித சூசையப்பர் மேல் தாம் கொண்டுள்ள அதீதப் பற்றுதல் காரணமாக தந்தை அவர்கள் தமது பெயரை அந்தோனி சூசைநாதர் என்று மாற்றிக் கொண்டார்.

1940ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் நாள் அன்று தந்தை அந்தோனி சூசைநாதர் தமது துறவற முதல் அர்ப்பணத்தையும், மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு 1943ஆம் ஆண்டு செப்டம்பர் 8ஆம் நாள் அன்று தமது துறவற வாழ்வின் நித்திய வார்த்தைப்பாட்டையும் யாழ் மறைமாவட்ட ஆயர் கியோமார் முன்னிலையில் இறைவனுக்கு அளித்தார். செபமாலை தாசர் துறவற சபையின் முதல் குருவே அருள்தந்தை அந்தோனி சூசைநாதர் தான் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

தூத்துக்குடி மறைமாவட்ட ஆயர் மேதகு திபூர்சியஸ் ஆண்டகையின் வேண்டுகோளுக்கு இணங்கி, யாழ் ஆயரின் அனுமதி பெற்று, தந்தை அவர்கள் தூத்துக்குடி வந்து சேர்ந்தார்கள். தூத்துக்குடி மறைமாவட்டத்தின் வடக்கன்குளத்தில் 1944ஆம் ஆண்டில் புஷ்பவனம் மடமும், 1954ஆம் ஆண்டில் வடக்கன்குளத்தில் கன்னியர்களுக்கான அமலிவனம் மடமும் தந்தை சூசைநாதரின் அரும்பெரும் முயற்சியினால் நிறுவப்பட்டன.

உவரி பணித்தளத்தில் பணியாற்றியபோது தந்தை அவர்கள் பரிசுத்த அமலோற்பவ மாதா மதுவிலக்கு சபையை நிறுவினார். உவரியில் தொடங்கிய இந்தசபை இன்று நூற்றாண்டு கண்டு 52 பங்குத்தளங்களுக்கு பரவி இருக்கிறது என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

மகாதேவன் குளத்திற்கு அருகே அடிமைப் பிடியில் வாழ்ந்து வந்த கத்தோலிக்கர்களை விடுவித்து தான் வாங்கிய 33 ஏக்கர் நிலப்பரப்பில் அவர்களைக் குடியமர்த்தி அவர்களுக்கென்று ஆலயம், தொடக்கப்பள்ளி மற்றும் குடிநீர் கிணறு ஆகியவற்றை தந்தை அவர்கள் அமைத்து தந்தமைக்காக அம்மக்கள் தங்கள் ஊரின் பெயரை **'அந்தோனியார்புரம்'** என மாற்றி அவரது நினைவாகவே அமைத்துள்ளார்கள்.

சோதிக்காவிளை என்ற ஊரில் வாழ்ந்து வந்த தாழ்த்தப்பட்ட ஐந்து குடும்பத்தினரை ஆதிக்கச் சாதியினர் கொடுமையிலிருந்து விடுவித்து, தூத்துக்குடி ஆயர் திபூர்சியஸ் ரோச் அவர்களின் பொருளுதவியினால் வாங்கப்பட்ட நிலத்தில் அவர்களை குடியமர்த்தி, அவர்களுக்கென கோவில், தொடக்கப்பள்ளி ,விவசாய கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவி, அவ்வூருக்கு 'ரோச் மாநகர்' எனப் பெயரிட்ட பெருமை தந்தை சூசைநாதர் அவர்களையே சாரும்.

திசையன்விளை அருகில் உள்ள வாகைநேரி ஊரில் தாழ்த்தப்பட்ட இந்து சமய மக்களை தனியாக ஓர் இடத்தில் குடியமர்த்தி, அவ்விடத்திற்கு 'உபகாரமாதாபுரம்' எனப் பெயரிட்டு, அவர்களை மாண்புடன் வாழ, தந்தையவர்கள் பணித்ததன் காரணமாக, அம்மக்கள் கிறிஸ்தவ நெறியைத் தழுவினர் இந்த விடுதலைப் பணியானது தந்தையவர்களின் சமூக சீர்திருத்தப் பணியை பறைசாற்றும்.

இவ்வாறு இறைவனின் சிறப்பான ஊழியராகப் பணியாற்றிய தந்தை அவர்கள், தனது வாழ்நாளில் கடைசி 13 ஆண்டுகளை இயேசு கிறிஸ்துவின் பாடுகளுடன் இணைத்துக் கொண்டு தனது பணிவாழ்வை ஒரு பலிவாழ்வாக வாழ்ந்து காட்டினார். 1968ஆம் ஆண்டு மே மாதம் 31ஆம் நாள் தந்தை அவர்களுக்கு நோயில் பூசுதல் அருள்சாதனம் வழங்கப்பட்டது. 1968ஆம் ஆண்டு ஜூன் 8ஆம் நாள் தந்தை அந்தோனி சூசைநாதர் அவர்கள் இறைவனில் இளைப்பாறினார். அன்னாரின் உடல் வடக்கன்குளம் பாத்திமாகிரி ஆசிரமத்தில் ஆலயத்திற்கு அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் 2011ஆம் ஆண்டு ஆகஸ்ட் 8ஆம் நாளன்று அந்தோனி சூசைநாதருக்கு புனிதர் பட்டம் அளிக்கும் முயற்சிக்கு அனுமதி அளித்தார். திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் 2015ஆம் ஆண்டு மார்ச் 26ஆம் நாள் இறையடியார் நிலைக்கு உயர்த்தினார்;.

எல்லாம் வல்ல இறைவன், நமது இறையடியார் அந்தோனி சூசைநாதர் அவர்களை அடுத்தடுத்து, **வணக்கத்திற்குரியவர்** (Venerable), **அருளாளர்** (Blessed), **புனிதர்** (Saint) என்ற நிலைக்கு உயர்த்துவாராக!

**அருள்பணி. சகேஷ் சந்தியா**

# மரியன்னையின் திருப்பெயர்கள்

## 37 இறைவாக்கினர்களின் அரசி!



அன்னை மரியாவின் சிறப்புப் பெயர்களுள் ஒன்றாக “இறைவாக்கினர்களின் அரசி” (Queen of the Prophets) உள்ளது. இந்தப் பெயரும் நம்மை வியப்படையச் செய்கிறது. காரணம், இறைவாக்கினர்கள் பழைய ஏற்பாட்டைச் சேர்ந்தவர்கள். அன்னை மரியாவுக்கு முற்காலத்தவர்கள். அவர்களுக்கு மரியா எப்படி அரசியாக இருக்க முடியும் என்னும் கேள்வி இயல்பாக எழலாம். ஆனால், பழைய ஏற்பாட்டைக் கூர்ந்து ஆய்வு செய்தால், முதல் நூலான தொடக்க நூலில் இருந்தே மரியாவின் சாயல் படிந்துள்ளதைக் கவனிக்கலாம். எப்படி புதிய உடன்படிக்கையின் நாயகனாம் இயேசு பழைய ஏற்பாட்டில் முன் மொழியப் பட்டுள்ளாரோ, அவ்வாறே, மரியாவும் பழைய ஏற்பாட்டிலும் வாழ்கிறார். பழைய ஏற்பாட்டின் அனைத்து இறைவாக்குகளும் இயேசுவிலும், இயேசுவின் தாயான மரியாவிலும் நிறைவேறின என்பது மறுக்க இயலாத உண்மை. எனவே, இறைவாக்கு உரைத்த இறைவாக்கினர்களுக்கும் அவரே அரசி என்று போதித்தனர் திருஅவைத் தந்தையர்.

“இதோ, கருவுற்றிருக்கும் அந்த இளம் பெண் ஓர் ஆண்மகவைப் பெற்றெடுப்பார்; அக்குழந்தைக்கு அவள் ‘இம்மானுவேல்’ என்று பெயரிடுவார்” (எசா 7:14) என்று முன்னுரைத்தார் எசாயா. “ஆண்டவராகிய நான் விந்தையான ஒன்றை உலகில் படைத்துள்ளேன்; ஒரு பெண் தன் கணவனைப் பாதுகாக்கின்றாள்” (எரே 31:22) என்று எரேமியா மொழிந்த பெண்ணும் மரியாவே என்கின்றனர் திருஅவைத் தந்தையர்.

வேறொரு பார்வையில் மரியாவே புதிய ஏற்பாட்டின் ஓர் இறைவாக்கினராகத்தான் காட்சி தருகிறார். காரணம், “வலியோரை அரியணையினின்று தூக்கி எறிந்துள்ளார்; தாழ்நிலையில் இருப்போரை உயர்த்துகிறார். பசித்தோரை நலன்களால் நிரப்பியுள்ளார்; செல்வரை வெறுங்கையராய் அனுப்பி விடுகிறார். மூதாதையருக்கு உரைத்தபடியே அவர் ஆபிரகாமையும் அவர்தம் வழி மரபினரையும் என்றென்றும் இரக்கத்தோடு நினைவில் கொண்டுள்ளார்” (லூக் 1:52-54) என்று அவர் பாடியது இயேசுவின் இறையாட்சிப் பணிபற்றிய இறைவாக்கே என்கிறார் மூன்றாம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித ஐரேனியுஸ்.

ஐந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த புனித கவுதென்சியுஸ் (St. Gaudentius of Brescia) கானாவூர் திராட்சை இரச அருளடையாளம் மரியாவின் இறைவாக்குத் தன்மைக்கு எடுத்துக்காட்டு என்கிறார். இயேசு தம் மணமகளாகிய திருஅவைமீது புதிய திராட்சை இரசமாம் தூய ஆவியாரைப் பொழிய விருப்பதற்கான முன்னடையாளமே அந்த நிகழ்வு என்று சொல்லும் புனித கவுதென்சியுஸ், இந்த இறைவாக்கின் வழியாக மரியா இறைவாக்கினரின் அரசியாக உயர்ந்து நிற்கிறார் என்கிறார். ★

# 38 திருத்தூதர்களின் அரசி!



மரியாவின் மன்றாட்டு மாலையில் “திருத்தூதர்களின் அரசி” (Queen of the Apostles) என்று அழைத்து அன்னையை வாழ்த்துகிறோம். தொடக்க காலத்திலிருந்தே கிறித்தவர்கள் மரியாவை திருத்தூதர்களின் அரசி என அழைத்து வந்துள்ளனர்.

இயேசுவின் காலத்திலேயே மரியாவின் அருமை பெருமைகளை அறிந்தவர்கள் தான் பன்னிரு திருத்தூதர்களும். இருப்பினும், இயேசுவின் விண்ணேற்புக்குப் பிறகே மரியாவின் மாண்பை இன்னும் அதிகமாக அவர்கள் உணர்ந்திருக்க வேண்டும்.

“அவர்கள் அனைவரும் சில பெண்களோடும், இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய **தாய் மரியாவோடும்** இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள்” (திப 1:14) என்னும் செய்தி மரியாவின் சிறப்பை உணர்த்துகிறது. இந்தக் காட்சி எத்தனையோ ஓவியர்களால் வரையப்பட்டுள்ளது. அவை அனைத்திலும் மரியா நடுநாயகமாகவே காட்சி தருகிறார்.

பெந்தகோஸ்தே பெருவிழாவுக்கு ஆயத்தமாக, தூய ஆவியாரைப் பெற்ற பிறகு திருத்தூதர்கள் ஆற்றவிருக்கும் திருப்பணிகளுக்கு முன்னோடியாகவே மரியாவின் தலைமையில் அவர்கள் ஒன்றிணைந்து இறைவேண்டல் செய்தார்கள். எனவேதான், ஒவ்வொரு ஆண்டும் பெந்தகோஸ்தே பெருவிழாவுக்கு அடுத்த நாள் மரியா திருத்தூதர்களின் அரசி என்னும் விழாவை நாம் கொண்டாடுகிறோம்.

மரியா திருத்தூதர்களின் அரசி என அழைக்கப்படுவதற்கு இன்னொரு சிறப்புக் காரணமும் உள்ளது. மரியாவே ஒரு திருத்தூதர்தான் என்பதே அது. இயேசுவைப் பற்றிய நற்செய்தியை, இறையாட்சியின் மதிப்பீடுகளை மரியாவைவிடச் சிறப்பாக யார் அறிவித்தார்கள்? இயேசுவின் பணிவாழ்வின் தொடக்கமான கானாவூர் திருமண விழாவிலிருந்து, தூய ஆவியார் பொழியப்பட்ட பெந்தகோஸ்தே நாள் வரையில் மரியா திருத்தூதர்களோடே இருந்தார். எனவே, திருத்தூதர்கள் அனைவரிலும் மேலானவர் மரியாவே என்று வாதிடுகின்றனர் திருஅவைத் தந்தையர்.

எலிசபெத்தைச் சந்திக்க மரியா விரைந்து சென்ற நிகழ்வு திருத்தூதுப் பணிகளுக்கு ஒரு முன்னோட்டம் என்றும் சொல்கின்றனர் மறைப்பணி இறையியலாளர்கள். மறைப்பணி ஆற்றுபவர்கள் தூய ஆவியாரால் நிரப்பப்பட்டிருக்க வேண்டும், இறை நம்பிக்கையில் நிறைந்து, தன்னலம் அற்றவர்களாய், பிறருக்குப் பணிவிடை செய்யும் மனநிலை கொண்டிருக்கவேண்டும். இவை அனைத்தும் எலிசபெத்தைச் சந்திக்கச் சென்ற மரியாவிடம் விளங்கின.

எனவே, திருத்தூதுப் பணி செய்யும் அனைவருக்கும் மரியாவே பாதுகாவலியும், அரசியுமாய் இருக்கிறார்.



அருள்பணி. குமார்ராஜா

# தரிசனம் தருவாய் தாயே...

## மரியன்னை காட்சிகள் பற்றிய தொடர் 4

***இதுவரை...***

கார்மேல் சபைத் தலைமைத் துறவியான சைமன் ஸ்டாக் என்பவருக்கு அன்னை காட்சி தந்து பழுப்பு நிற உத்தரியத்தை அளித்ததைக் கடந்த இதழில் பார்த்தோம். அக்காட்சியைப் பற்றி இன்னும் விரிவாகத் தொடர்ந்து பார்க்கலாம்.

***இனி...***

பாகாலின் பொய்வாக்கினரை முறியடிக்கத் தம்மோடு சிலரைக் கூட்டிக்கொண்டு, இஸ்ரயேல் மக்களின் நம்பிக்கையைக் காக்கும் பெரும் பணியை இறைவாக்கினர் எலியா செய்த இடம்தான் கார்மேல் மலை. இறைவாக்கினர் எலியாவின் இந்த ஆன்மீகத்தை முன்மாதிரியாகக் கொண்டு கார்மேல் துறவு அவை கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் உருவானது.



சிலுவைப் போர் நாடுகளைச் சார்ந்த எண்ணற்ற கிறிஸ்தவர்கள் இச்சபையில் துறவிகளாயினர். இவர்கள் புனித பேசில் வகுத்த துறவு வாழ்வு விதிகளைக் கடைப்பிடித்து வந்தனர். பல ஆண்டுகளுக்குப் பிறகு. சிலுவைப் போரின் வெற்றியாளர்களுள் சிலர் இம்மலையில் ஏறி, இங்கிருந்த துறவிகளைப் படுகொலை செய்துள்ளனர். இதனால், கார்மேல் துறவு அவையின் தலைமையகம் கார்மேல் மலையிலிருந்து இங்கிலாந்துக்கு மாற்றப்பட்டது.

இந்நிலையில், 1165இல் இங்கிலாந்து நாட்டில் பிறந்த சைமன் ஸ்டாக் என்பவரும் இச்சபையில் இணைந்து துறவியானார். நெருக்கடியான இக்காலக்கட்டத்தில், 1246ஆம் ஆண்டு கார்மேல் சபையின் தலைமைத் துறவியாகத் தேர்வு செய்யப்பட்டார். கார்மேல் அன்னையின் பரிந்துரையால் மட்டுமே சபையைக் காப்பாற்ற முடியும் என்று அவர் உறுதியாக நம்பினார். எனவே, தம் சபையின் எதிர்காலத்திற்காகவும், சபை எதிர்கொள்ளும் இடர்கள் அனைத்தும் களையப்படவும் அவர் உருக்கமாக மன்றாடி வந்தார். "கார்மேல் மலையில் பூத்த நறுமலர்" எனவும், "அலைகடலில் ஒளிரும் விண்மீன்" எனவும் அன்னைக்குப்




புகழாரம் சூட்டி ,சபையை அன்னைக்கு ஒப்புக் கொடுத்து அவர் செபித்தார்.

ஒருநாள், 1251ஆம் ஆண்டு ஜூலை மாதம் 16ஆம் நாள், தனது வழக்கப்படி அவர் செபித்துக் கொண்டிருந்தபோது, ஒரு கையில் குழந்தை இயேசுவையும் மறு கையில் பழுப்பு நிற உத்தரியத்தையும் ஏந்தியவராக அன்னை மரியா அவருக்குக் காட்சியளித்தார். தன் கையிலிருந்த பழுப்பு நிற உத்தரியத்தை சைமன் ஸ்டாக்கிடம் அன்னை தந்து, “என் அன்புள்ள மகனே, உன் சபைக்கான இந்த உத்தரியத்தைப் பெற்றுக்கொள். உன்மீதும், கார்மேல் சபையிலுள்ள என் பிள்ளைகள் மீதும் நான் கொண்டுள்ள அன்பிற்கும், அவர்கள் மீது நான் பொழியவிருக்கும் அருளுக்கும் அடையாளமாக இது இருக்கட்டும். இந்த உத்தரியத்தை அணிந்த நிலையில் இறக்கும் எவரும் நரகத்தின் நிலையான நெருப்பில் இருந்து காப்பாற்றப்படுவர். ஏனெனில், இது மீட்பின் பதக்கமாகவும், ஆபத்துகளிலிருந்து காக்கும் கேடயமாகவும், அமைதியும் பாதுகாப்பும் தரும் உறுதியுள்ள அடையாளமாகவும் இருக்கும்” என்று கூறினார்.

அமைதி, மீட்பு, ஆபத்துகளிலிருந்து பாதுகாப்பு போன்ற பல்வேறு வாக்குறுதிகளைக் கொண்டுள்ள இந்த உத்தரியம் “வாக்குறுதியின் உத்தரியம்” என்றே தொடக்கத்தில் அழைக்கப்பட்டு வந்தது. கார்மேல் சபைத் துறவிகளின் துறவு ஆடையின் ஒரு அங்கமாகவும் இது மாறியது. எனினும், இந்த உத்தரிய பக்தி கார்மேல் சபைக்கு வெளியேயும் பரவியபோது, எண்ணற்ற புனிதர்களும், திருத்தந்தையரும் இதைப் பரவலாக்கம் செய்தனர். இதன் விளைவாக, இன்று கார்மேல் சபை உறுப்பினர்களாக இல்லாத கத்தோலிக்கப் பொதுநிலையினர் பலரும் கூட இன்று உத்தரியத்தை அணிகின்றனர்.

இந்த உத்தரியத்தைப் பற்றிய இன்னொரு வியப்பூட்டும் செய்தியும் வழக்கில் உள்ளது. பின்னாளில், 1322ஆம் ஆண்டு, திருத்தந்தை 22ஆம் யோவான் என்பவருக்குக் காட்சியளித்த அன்னை, “இந்த உத்தரியத்தை அணிந்து இறக்கின்ற மனிதர்கள், தங்கள் பாவங்களுக்காக உத்தரிக்கும் நிலையில் துன்புற வேண்டியிருந்தாலும், அவர்களது இறப்பிற்கு அடுத்து வரும் சனிக்கிழமை அன்று, அருளின் அன்னையாகிய நான் இறங்கிச் சென்று அவர்களை மீட்டு, நிலைவாழ்வின் மலைக்கு அழைத்து வருவேன்” என்று கூறியதாகவும் மரபுவழிச் செய்தி ஒன்று கூறப்படுகின்றது.

அன்னையின் மற்றொரு முக்கிய காட்சியைப் பற்றி அடுத்த இதழில் பார்க்கலாம்.

தொடரும்...

அருள்பணி.
க.செ. பிரவீன் ராசு






# வரமாக வந்தவர் – அன்னையின் அமல உற்பவம்



திருச்சபை அன்னை மரியாளுக்கு அளிக்கப்பட்ட பெயர்களில் மிகவும் சிறப்பானதொன்று அமல உற்பவ அன்னை. “அமலம்” என்றால் தூய்மை என்பது பொருள். தூய்மையின் பிறப்பிடமான அன்னை மரியா, “வாழ்வோரின் தாய்” எனவும் அழைக்கப்படுகிறார். ஏவாளின் கீழ்ப்படியாமையால் விளைந்த முடிச்சு, (தொநூ 3:15) கன்னி மரியாவின் கீழ்ப்படிதலால் அவிழ்க்கப்பட்டது (லூக் 1:38). “ஏவாளால் சாவு, மரியாவால் வாழ்வு” என்று எடுத்துரைக்கப்படுகிறது.

புனித இரேனேயு, “மரியா தன் கீழ்ப்படிதலால் தானும், மனித இனம் அனைத்தும் நிறை வாழ்வு பெறக் காரணமானார்” என்று கூறுகிறார் (ச.ஏடு திருச்சபை-56). பதினோராம் நூற்றாண்டில் தூய மரியாவின் அமல உற்பவம் தெளிவான வடிவம் பெற்றது.

கி.பி. 1497ஆம் ஆண்டு திருத்தந்தை நான்காம் சிக்ஸ்துஸ் அன்னையின் செபங்களைத் தொகுத்து வழங்கினார். பிரான்சிஸ்கன் சபையைச் சேர்ந்த அருளாளர் டன்ஸ்காட்டஸ் என்பவர், “திருமுழுக்கு நம்மை பிறப்பு நிலைப் பாவத்திலிருந்து கழுவுகிறது. அன்னை மரியா உலக மீட்பர் இயேசுவின் தாய் என்பதால் பிறப்பு நிலைப் பாவத்திலிருந்து கடவுளின் அருளால் காப்பாற்றப்பட்டார்.” என்று விளக்கம் கொடுத்தார்.

இறுதியாக 1854 ஆம் ஆண்டு டிசம்பர் 8ஆம் நாள், திருத்தந்தை 9ஆம் பத்திநாதர் தூய மரியன்னையின் அமல உற்பவ விசுவாசக் கோட்பாட்டை பிரகடனப் படுத்தினார். “INEFFABILIUS DEUS” என்ற ஆணையின்படி, “எல்லாம் வல்ல இறைவன் தந்த அருளாலும், பிறப்புரிமையாலும் மனித குல இயேசு கிறிஸ்துவின் பேறுபலன்களை முன்னிட்டும், சுவக்கின், அன்னா (மரியாவின் பெற்றோர்) இவர்களின் உதிரத்தில் கருவான மரியா பிறப்பு நிலை பாவத்தினால் பாதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டார்.” இந்த மறையுண்மையை திரு அவையும் தூய ஆவியினால் கற்பிக்கப் பெற்று, பிள்ளைக்குரிய வாஞ்சையோடும் பாசத்தோடும் அன்பு நிறைத் தாயாக ஏற்றுக் கொள்கிறது.

மார்ட்டின் லூத்தர், “கடவுள் மரியாவின் உடலையும், ஆன்மாவையும் தூய ஆவியால் முற்றிலும் நிரப்பியதால் அவரிடம் எந்த பாவமும் இல்லை” என்று கூறுகிறார். (1962 -65) வரலாற்று சிறப்பு மிக்க இரண்டாம் வத்திக்கான் சங்கம், மரியா அமல உற்பவியாகப் போற்றப்படுவதை, “ஒரு பெண்ணால் சாவு வந்தது போல் மற்றொரு பெண்ணால் வாழ்வு வர வேண்டும் என்பதற்காக கிறிஸ்து மனிதர் ஆவதற்கு முன்பே அவரது தாயாக முன்னறிக்கப் பட்டவரின் இசைவு பெற வேண்டும் என்பதற்காக, நாசரேத்து கன்னியிடம் தூது சொல்ல வந்த வானதூதர், அருள் நிறைந்தவரே” (லூக் 1:28) என்று வாழ்த்துவதாக விளக்குகிறது. அவர் வயிற்றின் கனியாகிய இயேசுவும் தூயவர் (லூக் 1:35,48) இயேசு பிறப்பதற்கு 600 ஆண்டுகளுக்கு முன்னரே இறைவாக்கு உரைக்கப்பட்டது (எசா 7:14).

தேம்பாவணியில் வீரமாமுனிவர், மரியாவின் கன்னிமையை செண்பக மலருக்கும், கன்னிசங்காகிய வலம்புரிச் சங்கிற்கும் ஒப்பிட்டு, அவர் ஆண் உறவை அறியாதவள், தூய ஆவியால் கருத்தரித்ததாகப் பாடுகிறார். “உள்ளத்து நிறைவையே வாய் பேசும்” (மத் 12:34, லூக் 6:45) என்பதற்கிணங்க, உள்ளம் தூய்மையாக இருப்பின், நம் சொல்லும், செயலும் தூய்மையாக, உண்மையாக இருக்கும்.

**காட்சிகள் :** 1830ஆம் ஆண்டு நவம்பர் 27ஆம் நாள் அன்னை மரியா கத்தரீன் லபோரே என்பவருக்கு காட்சி அளித்தார். அன்னை மரியாவைச் சுற்றி முட்டை வடிவில் தோன்றிய ஒளி வட்டத்தில் “ஓ! பாவமின்றி உற்பவித்த மரியாவே, உம்மை அண்டி வரும் எங்களுக்காக வேண்டிக் கொள்ளும்” என்று காணப்பட்டது. 1858 ஆம் ஆண்டு புனித பெர்னதெத் சுபீரு என்பவருக்கு அன்னை மரியா லூர்து அன்னையாகக் காட்சியளித்தார். அப்போது மரியா, “நானே அமல உற்பவம்” என்று (Que soi era immaculata conception - தென் பிரான்சிய நாட்டு மொழி) கூறினார் என்று அறிகிறோம்.

இத்தகைய பாவ மாசு அணுகா தூய்மை நிறைந்த அன்னை மரியாவின் விழா டிசம்பர் 8ஆம் நாள் கொண்டாடப்படுகின்றது. வரமாக வந்த அன்னையை பின்பற்றி வாழும் நாம் உள்ளத் தூய்மையோடு, உண்மையான தாயன்புடன் பிறருடன் இணைந்து வாழ்வோம்!



**ரோஸ் சேவியர்**



# பனிமய சாட்சியம்

132

**மேரி ஜெனிஃபர், பெங்களூர்**

*நாங்கள் 2023ஆம் ஆண்டு தங்கத்தேர் திருவிழா காண பரிசுத்த பனிமய அன்னை திருத்தலத்திற்கு வந்தோம். எனக்கு திருமணமாகி 10 வயதில் மகன் இருக்கிறான். இரண்டாவது குழந்தை வேண்டி நானும் எனது தாயாரும் பனிமயத் தாயிடம் தங்கத்தேர் திருவிழாவின் போது மன்றாடினோம். தாயின் கருணையால் அதே மாதத்தில் இரண்டாவது குழந்தை கருத்தரித்து 2024ஆம் ஆண்டு பெண் குழந்தை பிறந்தது. அக்குழந்தைக்கு அமலியா ஜோன்னா ஸ்நோ என்று பனிமயத் தாயின் பெயரையே வைத்துள்ளோம். இப்படி ஒரு அழகான குழந்தையைப் பரிசாகக் கொடுத்த மாதாவிற்கு கோடான கோடி நன்றி. பனிமயத் தாயே வாழ்க!*




இம்மாதப் புனிதர்

# புனித நிக்கொலாஸ்



கி.பி. 270ஆம் ஆண்டு துருக்கியில் உள்ள மிரா நகரில் ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் தியோபானஸ் மற்றும் நோன்னா என்ற செல்வந்த தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். சிறுவயது முதலே இறைபக்தியிலும், பிறரன்பு செயல்களிலும் அதிக ஈடுபாடு கொண்டு விளங்கினார்.

இளம் வயதில் தனது பெற்றோரை இழந்தார். தனது பெற்றோரின் செல்வத்தை தனக்கென வைத்துக் கொள்ளாமல் பசித்தவர்களுக்கு உணவு, ஆடை இல்லாதவர்களுக்கு ஆடை, கடனில் தத்தளிக்கும் மக்களுக்கு உதவி, திருமணம் செய்ய முடியாத பெண்களுக்கு நிதி உதவி போன்ற பல இரக்கமான பணிகளை மறைமுகமாக செய்தார். அவரின் கொள்கை உதவி செய்வது தான்தான் என்று உதவி பெறுபவருக்குத் தெரியக்கூடாது.

ஒரு ஏழை மனிதருக்கு மூன்று மகள்கள் இருந்தனர். அவரால் மகள்களுக்குத் திருமணம் செய்து முடிக்க போதியளவு வசதி இல்லை. இதை அறிந்த நம் புனிதர், இரவில் யாரும் அறியாமல், சன்னல் வழியாக தங்க நாணயங்கள் நிரம்பிய மூட்டையை உள்ளே போட்டார். இவ்வாறு மூன்று முறை செய்தார். ஒவ்வொரு மகளுக்கும் ஒருமுறை.

மூன்றாவது முறை இவர் தங்கம் நிறைந்த மூட்டையை மெல்ல வந்து போடும்போது அவ்வீட்டின் தந்தை அவரைப் பார்த்து விட்டார். அவர் காலில் விழுந்து நன்றி கூற முயன்றார். ஆனால் நிக்கொலாஸ் அவரை எழுப்பி, “நன்றி சொல்ல வேண்டியது இறைவனுக்கே. நான் ஒரு கருவி மட்டுமே” என்று கூறினார். இந்நற்செயலே பின்னாளில், மேற்கத்திய நாடுகளில் ‘சாண்டா கிளாஸ்’ உருவாக அடிப்படையாக அமைந்தது. இவரின் செப வாழ்க்கை மற்றும் தியாகச் செயல்களால் மக்கள் இவரை மிகுந்த மரியாதையுடன் நடத்தினர்.

கி.பி. 300 - 305 காலப்பகுதியில் மிரா நகரின் ஆயராகத் தேர்வு செய்யப்பட்டார். ஆயராக இருந்தபோது அநீதிக்கு எதிராக தைரியமாகக் குரல் கொடுத்தார். சிறைவாசிகளின் விடுதலைக்கு பாடுபட்டார். ஆதரவற்ற குழந்தைகள் மற்றும் கணவரை இழந்தவர்களுக்கு உதவிகளைச் செய்தார்.

உரோமைப் பேரரசர்கள் டயோகிளேஷியின் மற்றும் மக்ஸிமினஸ் காலத்தில் கிறிஸ்தவர்கள் கடுமையான பாதிப்புக்கு உள்ளாயினர். ஆயராக இருந்த நிக்கொலாஸ் கிறிஸ்தவத்தைப் பாதுகாத்தார். மக்களுக்கு ஆறுதல் அளித்தார். அதனால், இவரும் கைது செய்யப்பட்டார். சிறையில் அடைக்கப்பட்டார்.

கி.பி. 325ஆம் ஆண்டு நடைபெற்ற உலகின் முதல் பெரிய திருச்சபைக் கூட்டமான நிக்கேய கவுன்சிலில் பங்கேற்றார். அரியஸ் என்ற இறையியலாளர், இயேசு கடவுள் அல்ல. அவர் படைக்கப்பட்டவர் என்று தவறாக போதித்தபோது, நிக்கொலாஸ் மிகுந்த தைரியத்துடன் அதற்கு எதிராகக் குரல் கொடுத்தார்.

இவர் கி.பி. 342, டிசம்பர் 6ஆம் நாளன்று விண்ணகப் பிறப்படைந்தார். இவரது உடல் மிரா நகரில் அடக்கம் செய்யப்பட்டது. பின்னர் 11ஆம் நூற்றாண்டில் புனிதரின் உடல் இத்தாலியின் பாரி நகரத்திற்கு மாற்றப்பட்டது. திருச்சபை இவரை மாலுமிகள், பயணிகள், குழந்தைகள், ஏழைகள் ஆகியோரின் பாதுகாவலராக அறிவித்தது.

புனிதரிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டியவை : உதவி செய்யும்போது நம்மைப் பற்றி மக்கள் அறிய வேண்டியதில்லை. உதவியின் நோக்கம் - உதவிபெறும் நபரின் மரியாதை காக்கப்பட வேண்டும். இச்செயல்தான் இன்று கடைப்பிடிக்க வேண்டிய அறநெறி.



அருள்சகோ. மிக்கேல் அருள்ராஜ்

# விவிலியப் போட்டி 128

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

**புதிய ஏற்பாடு மத்தேயு நற்செய்தி அதிகாரம் 1 முதல் 5**

விடையுடன் அதிகாரம், வசனம் எழுதுக

**கோடிட்ட இடங்களை நிரப்புக.**

1. உங்களை துன்புறுத்துவோருக்காக .............................. வேண்டுங்கள்.
2. .............................. என்பவர் எரி நரகத்திற்கு ஆளாவார்.
3. யாக்கோபின் மகன் மரியாவின் கணவர் .............................. .
4. மரியா .............................. ஆல் கருவுற்றிருந்தார்.
5. உன் கடவுளாகிய ஆண்டவரை வணங்கி அவர் ஒருவருக்கே .............................. .
6. .............................. காலத்தில் யூதேயாவில் உள்ள பெத்லகேமில் இயேசு பிறந்தார்
7. உடனே அவர்கள் .............................. விட்டு விட்டு அவரை பின்பற்றினார்கள்.
8. உங்கள் ஒளி .............................. முன் ஒளிர்க.

9: என் அன்பார்ந்த மைந்தர் இவரே இவர் பொருட்டு நான் ..............................

10. மரியாவிடம் பிறந்தவரே .............................. என்னும் இயேசு

## விவிலியப் போட்டி 127

**நவம்பர் 2025** — விடைக்குறிப்புகள்

**பாரூக்கு நூல் அதிகாரம் 1 முதல் 6 வரை**

| | | |
|---|---|---|
| 1. | சரி | 1:11 |
| 2. | தவறு | 2:6 |
| 3. | சரி | 3:38 |
| 4. | சரி | முன்னுரை |
| 5. | தவறு | 6:72 |
| 6. | தவறு | 6.69 |
| 7. | சரி | 1:1 |
| 8. | தவறு | 4:1 |
| 9. | சரி | 1:7 |
| 10. | தவறு | 5:2 |

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.12.2025**

## உங்கள் கவனத்துக்கு

பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளைத் தாளில் எழுதி பங்கு அலுவலகத்துக்கு யார் மூலமாவது கொடுத்து விடுங்கள். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். மறவாமல் குடும்ப அட்டை எண்ணையும் எழுதுங்கள். வாட்ஸ் அப்பில் விடை அனுப்ப வேண்டாம். பெயர் எழுதப்படாத விடைத்தாள்கள் பரிசீலிக்கப்படமாட்டாது.

**63831 98510** (வாட்ஸ் அப் மட்டும்) அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.

இந்த எண்ணுக்கு வரும் விடைகள் மட்டுமே எடுத்துக்கொள்ளப்படும். பழைய எண்ணுக்கு அனுப்பப்படும் விடைகள் நிராகரிக்கப்படும்.

**வாட்ஸ் அப்பில் விடை எழுதும் சலுகை பிற பங்குகளைச் சேர்ந்தவர்களுக்கு மட்டுமே.**

*குறிப்பு : ஒரே கையெழுத்தில் இரண்டு மூன்று பதில் தாள்கள் அனுப்பி இருந்தால் வேறு வேறு பெயர்களில் இருந்தாலும் அவற்றில் ஒன்று மட்டுமே வெற்றி பெற்றதாக எடுத்துக் கொள்ளப்படும். இச்செயலைத் தவிர்க்கவும்*



**சரியான விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 199**

**I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 114**

**விடை எழுதிய அன்பியங்கள் : 27**

**பரிசு பெறுபவர்கள் : 4**

1. பனிமயம் அன்பியம் — மெர்சி
2. பவுலடியார் அன்பியம் — ராஜா ரோஸ்லின்
3. பரிபூரண மாதா அன்பியம் — சப்னா கினிஸ்டன்
4. பொம்பெய் மாதா அன்பியம் — டிஃபானி அண்டோ

## பாராட்டுக்குரியவர்கள் : 110

**அந்தோனியார் அன்பியம்**
5. சரோஜா
6. பிருந்தா
7. ரீனா மொறாயிஸ்
8. ஜெயா

**அன்னை தெரசா**
9. ஜான்சி ராணி
10. ஜூலியட்ஸ் ரூபி

**அன்னை வேளாங்கன்னி**
11. டென்சி லோபோ
12. கவாஷினி ஆல்வின்
13. மிஷல் மிரல்

**கிறிஸ்தரசர்**
14. செலஸ்கி கிளமென்ட்
15. ரெக்ஸ் கிரீன்வெல்
16. ஜூலியட் சாவியோ
17. லூரட் வசந்த்

**தஸ்நேவிஸ் மாதா அன்பியம்**
18. சுரேஷ் பிரேமா
19. சுகன் மோனிஷா
20. அஸ்கேனியஸ் அந்தோணிசாமி
21. டாரல் தீத்தோணிஸ்
22. இருதயம்மாள்
23. ராஜா ஐரின்

**திவ்யபாலன் அன்பியம்**
24. சகாயராணி தனராஜ்
25. ஸ்டார்லக் ஏஞ்சலின்
26. சென்சிலா சகாயராஜ்
27. பிரின்சி

**பாத்திமா மாதா**
28. சுகந்தா ஸ்டெனி
29. பிச்சம்மாள்
30. அனு ஆல்வின்
31. ஸ்டெபி ரீகன்
32. ரீனா ராஜா
33. லிண்டா சீலன்
34. மேரி ஹம்லின்
35. பிளேரின் ஜீவிதா

**இரக்கத்தின் மாதா**
36. இருதயம்மாள் கொன்சால்
37. சேவியர் அம்மாள் கோமஸ்
38. பிரைட்டன் ஜெரோபின்
39. சித்ரா மோத்தா
40. பாப்டிஸ்டா
41. செல்வி புரோ

**ஜெபமாலை மாதா**
42. சகாயம்மாள் பெனடிக்ட்
43. கல்யாணி செல்வராஜ்
44. டிரிசா

**ஜூடு அன்பியம்**
45. கிறிஸ்டோ ஜெபினா
46. டெரன்சியா அரிஸ்டோ

**காவல் தூதர்**
47. ஜோ ட்ரினிஷா
48. வெனிட்டாள்
49. ஜூலியஸ் தல்மேதா
50. அல்பின்
51. ரஸ்கின் வசந்தா
52. செல்வராணி
53. சார்லட் பிராங்
54. சாந்தி ஆல்ட்ரின்
55. எலிஜா இம்மானுவேல்
56. ஜெயா அகஸ்டின்
57. பிரிசில்லா

**குழந்தை தெரசா**
58. பெர்லி டென்சன்
59. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**
60. மோனிகா செபஸ்டின்
61. எமல்டா
62. சுகிர்தா
63. பிரான்சிஸ் வாஸ்

**மணல் மாதா**
64. ரொசாரி கோமஸ்
65. வெர்ஜினியா
66. ஹெபிட்டா
67. லீமாரோஸ் ஜாய்
68. ஜெயந்தி

**லூர்து மாதா**
69. ஆலிவர் வி. ராயர்
70. ஜெனோ சேவியர்
71. ரோஸ்லின் தாமஸ்
72. பிலோ கோமஸ்
73. ரஜூலா ஜான்போஸ்கோ
74. சாண்டினா

**மிக்கேல் அதிதூதர்**
75. ஜோஸ்பின் பர்னாந்து
76. ஷீபா

**பனிமய அன்பியம்**
77. சுரேஷ் ஆனி
78. ஜாக்குலின் வினோதினி
79. ராணி
80. ஜூடு ரதி
81. சகாயராஜா சகாயராணி

**பவுலடியார்**
82. ஒபிலியா தாமஸ்

**பரிபூரண மாதா**
83. மெடோனோ

**பொம்பெய் மாதா**
84. இம்மாக்குலேட் சதீஷ்
85. லூடா கான்ஸ்டன்
86. அண்டோ எஃபினா
87. தெரசா பிரகாஷ்
88. பெலிக்ஸ் சோபியா
89. டிரைபேனா
90. மேத்யூ கர்டோசா

**இராயப்பர்**
91. போஸ்கோ ரெனோ
92. டெய்ஸி
93. ரொமில்டா வெனான்சியுஸ்
94. நேவிஸ் அம்மாள்

**சவேரியார்**
95. ஜான்சி ஜெயக்குமார்
96. டெலிலா அமலன்
97. அனுஷியா பீட்டர்
98. வினிஸ்டா ஷெரின்
99. ஜாஸ்மிலின் ஆல்டோ

**செபஸ்தியார்**
100. பிரவீனா
101. ஜெஸிலாசேவியர்
102. அந்தோனியம்மாள் டென்சிங்

**சிந்தாத்திரை மாதா**
103. நேசம்
104. ஜூடி ஆரோக்கியராஜ்
105. டோனஸ் ராயன்
106. லாசர் செல்வி

**சிறுமலர் அன்பியம்**
107. விஜி சகாயராஜ்
108. எல்சிட்டா ஆனந்தன்
109. விஜிலியா
110. தாயம்மாள்

**சூசையப்பர்**
111. கிறிஸ் ரீஜோ
112. ஹேமலதா
113. மென்சி

**திருச்சிலுவை**
114. ஜஸ்டின் ஸ்நோகுளோரி

**வியாகுல மாதா**
ஒருவருமில்லை

## பிற பங்குகளிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 85

### பரிசு பெறுபவர்கள் : 4

115. சென்னை — டெனிசாகிளாட்
116. திருச்சி — டோனி
117. புனித இஞ்ஞாசியார் கோவில் — சகோ. மரிய தூசைரூபி
118. இரத்னபுரம் சவேரியார் கோவில் — தயாபரராணி

## பாராட்டுக்குரியவர்கள் : 81

**சென்னை**
119. ரெஜினா கிரகோரி
120. பிரேமா குணசீலன்
121. மேமா ஸ்டீபன்
122. கமலஜோதி ஜெயசீலன்
123. ஆண்டனிகா ஷெர்லி
124. கனிசியஸ் விஷால்

**செங்கல்பட்டு**
125. மார்கரட் மேரி

**கொடைக்கானல்**
126. ஜெஸிந்தா மார்ட்டின்

**மதுரை**
127. ஜெஸிந்தா மேரி

**திருச்சி**
128. ஜான்ஸி ராணி
129. மோனிட்டா கிறிஸ்டி
130. மேத்யூ விவேக்
131. ஜெக ரட்சகன்

**ஆறுமுகநேரி**
132. தொம்மை அந்தோணி
133. ஜெயராணி

**ஆலந்தலை**
134. பொன்சேகா தங்கராஜ்
135. மரியம்மாள்

**தருவைக்குளம்**
136. மைக்கேல் ஸ்டிபானி
137. லில்லி சோபியா

**திருப்பூர்**
138. ததேயூஸ் கரோலின்

**தேனி**
139. கரோலின் பிலவேந்திரன்
140. சூர்யா அன்பு

**புதியம்புத்தூர்**
141. ஹெலன் அன்னமனி

**கயத்தார்**
142. அமல்ராஜ்

**திண்டுக்கல்**
143. ரோசாலி
144. ஜெர்மேன்

**சூலூர்**
145. சத்யா சேவியர்

**கடலூர்**
146. ஹென்றி தாஸ்

**புன்னைக்காயல்**
147. ஜோஸ்னா

**வீரபாண்டியபட்டணம்**
148. ரேச்சல் சாந்தினி

**உவரி**
149. அர்லின் ஈவ்லின்

**உடன்குடி**
150. ஸ்நோவின்

**ஏரல்**
151. இன்ஃபன்டா தினேஷ்

**திருநெல்வேலி**
152. மெர்லின் ரோசி

### தூத்துக்குடி நகர பங்குகள்

**திரு இதயங்களின் பேராலயம்**
153. கிரேட்டா ராஜா
154. ரமோலா கமிலஸ்
155. ஜெயந்தி பீட்டர்
156. வெர்ஜினா ஜோஸ்பின் மேரி
157. டீனுராய் ஜேசுபாலு

**குருஸ்புரம்**
158. ஜான்சி மெண்டிஸ்
159. ஆசிர்வாதம்
160. மாசில்லா
161. பௌவுசி ஜோ மைக்கேல்
162. மெர்சி ஜெரால்ட்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
163. சகாயம்
164. டோமினிக்
165. பேபின் ரால்ஃப்
166. டார்லிமா அமுதன்

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
167. செக்கரியா சாமுவேல்
168. சலைத் எலிசா

**யூதா ததேயு கோவில்**
169. ஆரோக்கிய சர்மிளா
170. ஜூடி ரீத்தம்மாள் மேரி
171. ரோஸ் சேவியர்
172. ஜெனட் சேவியர்
173. லூர்து சுவிதா
174. இம்மானுவேல் சேகர்
175. சகாயமேரி
176. சகாயராஜ் ரொட்ரிக்ஸ்

**அந்தோணியார் கோவில்**
177. டயானா வினோத்;
178. இருதயம்மாள் கபிரியேல்
179. வயோலா ஜான்சன்
180. மென்சிலா லொயோலா
181. ரீடன்

**காந்தி நகர்**
182. ரியாலினோ
183. கிளமென்சியா மேக்டன்
184. செலஸ்டின்
185. பிண்டன் சோபியா
186. சாந்தினி

**அண்ணா நகர்**
187. வென்சி ராணி

**சார்லஸ் கோவில்**
188. சகாயிட்டா மச்சாது
189. ரூபி ஏஞ்சல்
190. அல்போன்சா பர்னான்டோ

**புனித இஞ்ஞாசியார் கோவில்**
191. சகோ. லோரா மேரி
192. பாத்திமா ஏஞ்சலின்
193. சூசை நெவின்
194. சகோ. ரூபெல்லா

**இரத்னபுரம் சவேரியார் கோவில்**
195. வெர்ஜின்

**திரேஸ்புரம்**
196. கோல்வின் ஜேசுராஜ்
197. ஸ்நோ வெண்பா
198. கிருபா

**பாத்திமா நகர்**
199. ஷர்மிளா ரமேஷ்

**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 218**
**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 199**



**பரிசுத்த பனிமய அன்னை திருத்தலப் பேராலயம், தூத்துக்குடி**

# 2025 கிறிஸ்து பிறப்புக் கால சிறப்பு நிகழ்வுகள்

## 1. கிறிஸ்து பிறப்பு விழா வழிபாட்டு விபரங்கள்



24.12.2025 புதன் இரவு 11.00 மணிக்குப் பேராலயக் கதவுகள் திறக்கப்படும். 11.15 மணிக்குப் பாடகர் குழுவினரால் கிறிஸ்துமஸ் பாடல்கள் இசைக்கப்படும். 11.50 மணிக்கு நள்ளிரவுத் திருப்பலி தொடங்கும்.

மறுநாள் (25.12.2025 வியாழன்) காலை 06.30 மணிக்கும், 08.00 மணிக்கும் தமிழில் திருப்பலியும், 09.30 மணிக்கு ஆங்கிலத்தில் திருப்பலியும் நடைபெறும். மாலையில் திருப்பலி நடைபெறாது. மாலை 05.30 மணிக்கு திவ்விய நற்கருணை ஆசீரும், திவ்விய பாலன் ஆசீரும் நடைபெறும்.

## 2. கிறிஸ்துமஸ் விழாக் கலைநிகழ்ச்சிகள்

கிறிஸ்துமஸ் (25.12.2025 வியாழன்) அன்று மாலை 06.30 மணிக்கு “பனிமய இளையோரின்” முன்னெடுப்பில் கிறிஸ்துமஸ் விழாக் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

## 3. மாசில்லாக் குழந்தைகள் விழா



மாசில்லாக் குழந்தைகள் திருவிழாவை முன்னிட்டு 28.12.2025 ஞாயிறு அன்று இரண்டாவது திருப்பலி காலை 06.30 மணிக்கு நடைபெறும். திருப்பலியின் முடிவில் குழந்தைகள் ஆசீர்வதிக்கப்படுவார்கள். பாலன் ஆசீர்வாதம் நடைபெறும்.

## 4. திருக்குடும்ப சபைத் திருவிழா



திருக்குடும்ப விழாவாகிய 28.12.2025 ஞாயிறு அன்று நமது பங்கின் திருக்குடும்ப சபையினர் தங்கள் சபைத் திருவிழாவைக் கொண்டாடுவர். அன்றைய இரண்டாவது திருப்பலியில் புதிய பொறுப்பாளர்கள் பணி ஏற்பதுடன், புதிய உறுப்பினர்களுக்கு நாடா அணிவிக்கப்பட்டு, சபையில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

## 5. திருமண விழா நாயகர்களின் நன்றித் திருப்பலி

பேராலயப் பங்கைச் சேர்ந்த திருமண பொன்விழா, வெள்ளி விழா நாயகர்கள், மற்றும் திருமணமாகி 40 ஆண்டுகள், 60 ஆண்டுகள், 70 ஆண்டுகள், அதற்குமேல் நிறைவு செய்யும் தம்பதியருக்கான சிறப்பு நன்றித் திருப்பலி 28.12.2025 ஞாயிறு அன்று மாலை 05.30 மணிக்குப் பேராலயத்தில் நடைபெறும்.

## 6. ஆண்டின் இறுதிநாள் நன்றி வழிபாடு

இந்த ஆண்டின் இறுதி நாளான **31.12.2025** புதன் அன்று மாலைத் திருப்பலி முடிந்ததும் **நன்றி வழிபாடு** நடைபெறும். தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதனம் வழங்கப்படும்.

## 7. புத்தாண்டு வழிபாட்டு விபரங்கள்

**31.12.2025** புதன் இரவு **11.15** மணிக்குப் பேராலயக் கதவுகள் திறக்கப்படும். **11.30** மணிக்குப் பாடகர் குழுவினரால் கிறிஸ்துமஸ் - புத்தாண்டுப் பாடல்கள் இசைக்கப்படும். **12.00** மணிக்கு பேராலய மணிகள் முழங்க, பனிமய அன்னைக்கு குடும்பங்களை ஒப்புக்கொடுக்கும் செபம் மன்றாடப்படும். பின்னர், **புத்தாண்டுத் திருப்பலி** நடைபெறும்.



## 8. மேதகு ஆயரின் திருப்பலி

**01.01.2026** வியாழன் அன்று காலை **06.30** மணிக்கு காலைத் திருப்பலி நடைபெறும். காலை **08.00** மணிக்கு **மேதகு ஆயர் ஸ்டீபன்** அவர்களின் தலைமையில் **புத்தாண்டு சிறப்புத் திருப்பலி** நடைபெறும். அன்று காலை **09.30** மணிக்கு ஆங்கிலத்தில் திருப்பலி நடைபெறாது. அன்று மாலையில் திருப்பலி நடைபெறாது.

மாறாக, மாலை **05.30** மணிக்கு **திவ்விய நற்கருணை ஆசீரும், திவ்வியபாலன் ஆசீரும்** நடைபெறும்

## 9. முதியோர், நோயாளருக்கு நற்கருணை

**02.01.2026** தலைவெள்ளி அன்று காலையிலும், மாலையிலும் பங்கின் முதியோர், நோயாளருக்கு நற்கருணை வழங்கப்படும்.

## 10. ஆண்டின் முதல் சனி வழிபாட்டு விபரங்கள்

**03.01.2026** ஆண்டின் முதல் சனியாக இருப்பதால், காலை **11.00** மணிக்கு செபமாலையும், **11.30** மணிக்கு சிறப்புத் திருப்பலியும் நடைபெறும். மாலை **06.30** மணிக்கு சப்பரப் பவனியும், தொடர்ந்து **திவ்விய நற்கருணை ஆசீரும், திவ்விய பாலன் ஆசீரும்** நடைபெறும்.



## 11. திருக்காட்சிப் பெருவிழா

திருக்காட்சிப் பெருவிழாவான **04.01.2026** ஞாயிறு அன்று வழக்கமான திருப்பலிகள் நடைபெறும். மாலை **06.30** மணிக்கு **திவ்விய நற்கருணை ஆசீரும், திவ்வியபாலன் ஆசீரும்** நடைபெறும்.

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 18)

## டிசம்பர் - 2025

| | |
|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : அருள்பணி. ஸ்டார்வின் |
| உதவிப் பங்குத் தந்தை | : அருள்பணி. பிரவீன் ராசு |
| களப் பணியாளர் | : சகோ. மிக்கேல் அருள்ராஜ் |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | ஞாயிற்றுக் கிழமைகளில் |
|---|---|---|
| காலை 5.30, 6.30<br>மாலை 5.30 | காலை 5.30, 6.30 திருப்பலி<br>காலை 11.00 செபமாலை, **நவநாள் திருப்பலி**<br>மாலை 5.30 திருப்பலி<br>மாலை 6.30 செபமாலை நவநாள், நற்கருணை ஆசீர் | காலை 5.00, 6.30, 8.00 திருப்பலி<br>காலை 9.30 ஆங்கிலத் திருப்பலி<br>மாலை 5.30 திருப்பலி<br>மாலை 6.30 செபமாலை, நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** *சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00*

*மற்ற நாள்களில் எந்நேரமும் பங்குத்தந்தையரை அணுகலாம்.*

- ✓ *திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (திருவருகைக் காலம், தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)*

- ✓ *புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (திருவருகைக் காலம், தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).*
- ✓ *புதுநன்மை அருள்சாதனம் பெற விரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.*

- ✓ *திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00 மணிக்கு அனுமதி உண்டு. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.*
- ✓ *ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30*
- ✓ *அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்*

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : *காலை 10.00 மணி - 01.00 மணி*<br>*மாலை 04.00 மணி - 05.30 மணி*
- ✓ *இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.*
- ✓ *நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம்.*



# பனிமயச் சுவடுகள்

*(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)*

1. பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிப் பேரவையின் **பொதுக்குழுக் கூட்டம் 29.10.2025 புதன்கிழமை** மாலை 07.15 மணிக்கு **அந்தோனியார் அரங்கத்தில்** நடைபெற்றது.
2. நவம்பர் மாதம் முழுவதும் திங்கட்கிழமை முதல் வெள்ளிக்கிழமை வரை முதல் திருப்பலி முடிந்தபிறகும், ஞாயிற்றுக்கிழமை இரண்டாம் திருப்பலி முடிந்தபிறகும் உத்தரிக்கும் நிலையிலுள்ள ஆன்மாக்களுக்காக **சிலுவைப்பாதை** ஒப்புக்கொடுக்கப் பட்டது.
3. இறந்த நம்பிக்கையாளரின் நினைவுநாளான 02.11.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று காலையில் 05.00, 06.30, 08.00, 09.30 மணி திருப்பலிகள் நடைபெற்றன. அன்று மாலை 05.00 மணிக்கு பொதுக்கல்லறைத் தோட்டத்தில் சிறப்புத் திருப்பலி நடைபெற்றது.
4. **07.11.2025 தலைவெள்ளி** அன்று **மாலை 05.30 மணி**க்கு திருச்சிலுவை சிற்றாலயத்தில் புதிய பீடம் மந்திரிக்கப்பட்டு அதனைத் தொடர்ந்து திருப்பலியும், திரு இருதய செபமாலை மற்றும் நற்கருணை ஆசீரும் நடைபெற்றது.
5. வத்திக்கானின் ஒருங்கிணைந்த மனித முன்னேற்றத்திற்கான திருப்பேராயத்தின் தலைவர் மேன்மைமிகு **கர்தினால்** மைக்கேல் செர்னி சே.ச அவர்கள் நமது பேராலயத்திற்கு **08.11.2025 சனிக்கிழமை** வருகைதந்து அன்று காலை 11.30 மணி திருப்பலியை ஒப்புக்கொடுத்தார்கள். திருப்பலியில் மக்கள் திரளாகக் கலந்துகொண்டு ஆசீரைப் பெற்று சென்றார்கள்.
6. நவம்பர் மாதம் 09ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இறைஇயேசுவின் யூபிலி 2025 ஆண்டை முன்னிட்டு **இறையடியார் அந்தோணி சூசைநாதர் மற்றும் இறையடியார் அகஸ்டின் பெரைரா** ஆகிய இருவரையும் நினைவுகூர்ந்து அவர்களுக்கு விரைவில் புனிதர் பட்டம் கிடைக்க மன்றாடப்பட்டது.
7. புனித செசிலியாவின் திருவிழாவை முன்னிட்டுப் **பாடகர் குழுவினர், திரைக் குழுவினருக்கான ஒன்றுகூடல்** 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை மாலை 06.45 மணிக்கு நேவிஸ் அரங்கில் நடைபெற்றது. கலந்துகொண்ட அனைவருக்கும் நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.
8. **கிறிஸ்து அரசர் பெருவிழா**வை முன்னிட்டு 23.11.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணி முதல் மாலை 05.00 மணிவரை தொடர் நற்கருணை ஆராதனை நடைபெற்றது. அன்பியங்கள் மண்டலங்களாகச் சிறப்பித்தனர்.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### I. திருமுழுக்குப் பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 42. | அட்ரியல் பெர்னான்டோ | சபினியானுஸ் - ஆனி லார்கின் | 16.11.2025 | சூசையப்பர் |






## வாழ்த்துகின்றோம்
## 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 39. | அமரிஸ் கேப்ரிலா | ஜெகநாதன் - நிரோஸ்மி | 09.11.2025 | ஜூடு |
| 40. | ஸ்னோ ஃபேபியோ | பிராங்ளின் - லூடி | 29.11.2025 | தஸ்நேவிஸ் மாதா |



## ஆசி கூறுகின்றோம்
## 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | அன்பியம் | நாள் |
|---|---|---|---|
| 46. | மரிய லாம்பர்ட் ஜான்பால் - ஜான்சிராணி | அன்னை வேளாங்கன்னி | 27.11.2025 |



## செபிக்கின்றோம்
## 4. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | உறவினர் பெயர் | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 53. | ஜூடு | அந்தோணி சாமி | 08.11.2025 | பனிமயம் |
| 54. | ப்ரீத்தி | அமிர்தராஜா | 12.11.2025 | செபமாலை மாதா |
| 55. | ஜெயராணி | ஸ்டீபன் | 13.11.2025 | குழந்தை தெரசா |
| 56. | பிராங்கோ முறாயிஸ் | தமயந்தி | 24.11.2025 | செபஸ்தியார் |

## நடைபெறவிருப்பவை

★ 03.12.2025 புதன்கிழமை அன்று **புனித சவேரியார் திருவிழாத் திருப்பலி** காலை 05.30 மணிக்கு புனித சவேரியார் மண்டபத்தில் நடைபெறும்.

★ 05.12.2025 வெள்ளிக்கிழமை அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.

★ 06.12.2025 மாதத்தின் **முதல் சனியன்று மாலைத் திருப்பலியும்,** சப்பரப் பவனியும், தொடர்ந்து நவநாள் வழிபாடும் நடைபெறும். இவை ஸ்நோஸ் பசிலிக்கா யூடியூப் சேனலிலும், சூர்யா, யாழ் தொலைக்காட்சிகளிலும் நேரலையாக ஒளிபரப்பப்படும்.

## திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

❖ ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும் வழங்கப்படுகின்றது. வரும் நாள்களில் **அன்பு உணவு** வழங்க விரும்புவோர் பங்கு அலுவலகத்தில் முன்பதிவு செய்யவும்.

❖ ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசீர், திருப்பலி நடைபெறும்.

| எண். | நாள் | செய்தித் தலைப்பு |
|---|---|---|
| 63. | 02.12.2025 | அன்பும் புகழ்ச்சியும் |
| 64. | 09.12.2025 | அன்பும் மகிழ்ச்சியும் |
| 65. | 16.12.2025 | அன்பும் கீழ்ப்படிதலும் |
| 66. | 23.12.2025 | அன்பும் இரக்கமும் |
| 67. | 30.12.2025 | அன்பும் நன்றியும் |

# 30ஆம் நாள் நினைவஞ்சலி

"நான் ஆண்டவரிடம் அடைக்கலம் புகுந்துள்ளேன்"



பிறப்பு
04.06.2009

இறப்பு
12.11.2025

## A. ப்ரீத்தி

ஆண்டாண்டு கடந்தாலும் அழியாது உன் அன்பும் பாசமும்
மாதங்கள் மறைந்தாலும் மறையாது உன் உறவு.
நாள்கள் நகர்ந்தாலும் நாங்கள் இருப்போம் உன் நினைவில்....

*பிரிவால் வருந்தும்*

தந்தை : X. அமிர்தராஜா
தாய் : பபிதா
அண்ணன் : பிரியன்
மற்றும் குடும்பத்தினர்

# நினைவு அஞ்சலி

அன்னையரை மேன்மைப்படுத்துவோர் செல்வம் திரட்டி வைப்போர்க்கு ஒப்பாவர். தந்தையரை மதிப்போர் தங்கள் பிள்ளைகளால் மகிழ்ச்சியுடன் நீடு வாழ்வார்.

(சீஞா 3:4,5)

**26ஆம் ஆண்டு**



மண்ணில் 06.11.1940 | விண்ணில் 07.04.1999

## P. அந்தோணிசாமி பர்னாந்து

**3ஆம் ஆண்டு**



மண்ணில் 26.05.1948 | விண்ணில் 14.12.2022

## A. ரஞ்சிதம் பர்னாந்து

எங்களை பண்போடும் பாசத்தோடும் வளர்க்க
உழைத்து ஆளாக்கி எங்களுக்கு உழைக்கக் கற்றுத் தந்து நல்வழிப்படுத்திய
பேரன்புமிக்க பெற்றோருக்காக இறைவனை வேண்டி நன்றி கூறி
தூயகத்தில் இறைவனை போற்றுகிறோம்.

*மறைந்த போதிலும்*

*நினைத்துக் கொண்டிருக்கும்.....*

குடும்பத்தினர்

# விண்ணக வாழ்வின் முதலாம் ஆண்டு நினைவு



**மண்ணில்**
**27.11.1950**

**விண்ணில்**
**11.12.2024**

# S. லூர்து சாமி

நீங்கள் மறைந்தாலும் உங்கள் அன்பும் வழிகாட்டுதலும் என்றென்றும் வாழும்.
உங்கள் இடத்தை யாராலும் நிரப்ப முடியாது.
வாழ்க்கையில் நாங்கள் உங்களை மிகவும் நேசித்தோம்.
நீங்கள் இங்கே இருந்த நாட்களின் விலைமதிப்பற்ற நினைவுகள் எப்போதும் இருக்கும்.
நாங்கள் உங்களை பார்க்க முடியாவிட்டாலும்
நீங்கள் எப்போதும் எங்கள் அருகில் இருக்கிறீர்கள்.

*பிரிவால் துயருறும்*

அன்பு மனைவி : **L. லீமா ரோஸ்**
மற்றும்
**மக்கள், மருமக்கள், பேரன், பேத்திகள்**
மற்றும்
**உற்றார், உறவினர்**

## விண்ணக வாழ்வின்
## முதல் வருட நினைவஞ்சலி

தந்தையின் ஆசி பிள்ளைகளின் குடும்பங்களை நிலைநாட்டும் (சீராக் 3:9)

# M. அமலன்

(Port Trust - Rtd.)

# ஜோசப் சில்வஸ்டர்



| பிறப்பு | திருமண பொன்விழா | இறப்பு |
|---|---|---|
| 31.12.1946 | 03.07.1975 | 08.12.2024 |

**வயது : 77**

கண்ணீரால் நிஜம் சொல்ல முடியாது
நினைவுகளில் உங்களது வலிமை காண்கின்றோம்.
வாழ்ந்த நாட்கள் இனிய நினைவுகள் ஆகின்றன.
விடைபெற்றாலும் நீங்கள் எங்கள் இதயத்தில் வாழ்கின்றீர்கள்.

*பிரிவால் துயருறும்*

மனைவி : **டெலிலா**
மகன், மருமகள், பேரன்

---

## முதல் வருட நினைவஞ்சலி

நான் உன்னை பத்திரமாய் பார்த்துக் கொள்வேன் (எரேமியா 40:4)



# சகாயராணி ரிக்லி

அன்பிலே எங்களை அரவணைத்தீர்கள்
ஆற்றலுடன் வழிநடத்தினீர்கள்
உழைப்பிலே உயர்ந்து நின்றீர்கள் – இன்று
எம்மை பிரிந்து மீட்பருடன் இணைந்துவிட்டீர்கள்
என்றும் எம் நெஞ்சங்களில் வாழ்கின்றீர்கள்

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23.07.1959 | 03.12.2024 (மதுரை) |

**வயது : 66**

*பிரிவால் துயருறும்*

கணவர் : **ஜோசப் ரிக்லி**
மற்றும் மகன்கள், மருமகள்கள்
பேரன், பேத்திகள்

# இறைவனில் இணைந்த நினைவஞ்சலி

நீர் இன்று என்னோடு பேரின்ப வான் வீட்டில் இருப்பீர்
என உறுதியாக உமக்கு சொல்கிறேன் என்றார்

(சங் 23:43)

## 42ஆம் ஆண்டு 25ஆம் ஆண்டு 31ஆம் ஆண்டு



| D. மரிய ராஜமணி அம்மாள் பர்னாந்து | D. போஸ்கோ லோபோ | M. டேவிட் லோபோ |
|---|---|---|
| பிறப்பு : 01.11.1933 | பிறப்பு : 07.09.1953 | பிறப்பு : 07.09.1923 |
| இறப்பு : 04.06.1983 | இறப்பு : 12.05.2001 | இறப்பு : 18.12.1994 |
| வயது : 49 | வயது : 48 | வயது : 72 |

உங்கள் நினைவுகள் அழிவதில்லை
உங்களை நினைப்பவர்கள் இருக்கும்வரை

| மக்கள் | மருமக்கள் |
|---|---|
| D. வால்டர் லோபோ | J. பெட்சி பர்னாந்து |
| D. விஜி லோபோ | C. ஜான் பர்னாந்து |
| D. சரோ லோபோ | T. இருதயராஜ் மஸ்கரனாஸ் |
| D. சுகந்தி லோபோ | S.M. டென்சிங் பர்னாந்து (லேட்) |

மற்றும் பேரன்கள், பேத்திகள், பூட்டன், பூட்டிகள்

320A, தெற்கு காட்டன் ரோடு, தூத்துக்குடி - 1.

# In Loving Memory Of My parents



| CHELLAM CARDOZA | | JOTHI FERNANDO | |
|---|---|---|---|
| BLOOMED | WITHERED | BLOOMED | WITHERED |
| 09/01/1938 | 13/12/2013 | 17/06/1944 | 23/02/2023 |

**YEARS ARE OVER ,SINCE YOU PASSED AWAY**
**THE WAY I MISS YOU IS DIFFERENT NOW**
**I HOPE YOU KNOW HOW MUCH YOU MEANT TO US**
**I STILL THINK ABOUT YOU EVERYDAY**
**I JUST LOVE AND MISSED YOU**
**IN MY OWN SPECIAL WAY.**

**There will be a Requiem Mass for the soul of my beloved parents @6:30am 13th Dec 2025@ OLS Basilica.**

**Fondly remembered and forever missed by Rajesh Cardoza & Family..**

SHINY Ph : 98421 31493